## இளம்பெண் ருசிகா மானபங்க வழக்கு

# முன்னாள் டி.ஜி.பி. ரத்தோருக்கு 18 மாத சிறை



எஸ்.பி.எஸ்.ரத்தோர், ருசிகா.

**சண்டீகர், மே 25:** இளம்பெண் ருசிகா மானபங்கம் செய்யப்பட்ட வழக்கில் ஹரியாணா மாநில முன்னாள் டி.ஜி.பி.யான எஸ்.பி.எஸ்.ரத்தோருக்கு வழங்கப்பட்ட தண்டனை 6 மாதத்தில் இருந்து 18 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது.

தீர்ப்புக்குப் பின் உடனடியாக கைது செய்யப்பட்ட அவர், சண்டீகரில் சிறையில் அடைக்கப்பட்டார்.

வளர்ந்து வந்த இளம் டென்னிஸ் வீராங்கனையான ருசிகா (14), பஞ்ச்குலா என்ற இடத்தில் 1990 ஆகஸ்ட் 12-ல் ரத்தோரால் மானபங்கம் செய்யப்பட்டார். இச்சம்பவம் நிகழ்ந்து 3 ஆண்டுகளுக்குப் பின் ருசிகா தற்கொலை செய்து கொண்டார்.

மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) போலீஸார் இது தொடர்பாக ரத்தோர் (68) மீது வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில், ரத்தோருக்கு 6 மாத கடுங்காவல் தண்டனை விதித்து சி.பி.ஐ. சிறப்பு விசாரணை நீதிமன்ற நீதிபதி ஜே.எஸ்.சித்து கடந்த டிசம்பர் 21-ல் உத்தரவிட்டார்.

அவருக்கு வெறும் 6 மாத சிறை தண்டனை அளிக்கப்பட்டது நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. இதனிடையே, அவருக்கு முன்னர் அளிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் பதக்கமும் பறிக்கப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து, தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யுமாறு மாவட்ட கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ரத்தோர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.

அதேசமயம், அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனையை - சட்டம் அனுமதிக்கும் அளவான - 2 ஆண்டுகளாக அதிகரிக்க வேண்டும் என சி.பி.ஐ. சார்பிலும், ருசிகாவின் பெற்றோர் சார்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ரத்தோரின் மனுவை நிராகரித்ததுடன், சி.பி.ஐ. மற்றும் ருசிகாவின் பெற்றோரின் மனுவை ஏற்று தண்டனையை 6 மாதத்தில் இருந்து 18 மாதங்களாக உயர்த்துவதாக நீதிபதி குர்பிர் சிங் செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கினார்.

**சிறையில் அடைப்பு:** நீதிபதியின் உத்தரவுக்குப் பின்னர், உத்தரவின் நகலை வழங்குமாறு ரத்தோர் மனைவியும், அவரது வழக்கறிஞருமான அபா மனு அளித்தார். அதனால், ரத்தோர் நீதிமன்ற அறையிலேயே அமர்ந்திருந்தார்.

உத்தரவு நகலை உடனே அளிக்க சட்டத்தில் இடமில்லை என நீதிபதி கூறியதையடுத்து சி.பி.ஐ. அதிகாரிகள் ரத்தோரை கைது செய்து அழைத்துச் சென்றனர். பின்னர், உள்ளூர் சிறையில் அவர் அடைக்கப்பட்டார்.

**ருசிகா தோழி, குடும்பத்தினர் திருப்தி:** செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தாலும், தவறு செய்தால் இந்த நாட்டின் சட்டத்தில் இருந்து தப்பிக்க முடியாது என ருசிகா குடும்பத்தினர் தீர்ப்புக்குப் பின் திருப்தியுடன் தெரிவித்தனர்.

ருசிகாவை தற்கொலைக்குத் தூண்டியது, குடும்பத்தினரை துன்புறுத்தியது, அவரது சகோதரரின் வாழ்க்கையை சீரழித்தது போன்றவற்றுக்கும் ரத்தோருக்கு தண்டனை பெற்றுத் தரும் வரை போராடுவோம் என ருசிகாவின் தோழியும், ரத்தோர் மீது வழக்கு தொடர காரணமாக இருந்தவருமான ஆராதனா குப்தா தெரிவித்தார்.